செ.வெ.எண்-36 நாள்-22.02.2017

# அரியலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு தலைமை கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கி இன்று (22.02.2017) தொடங்கிவைத்தார்.

அரியலூர் மாவட்டம், அஸ்தினாபுரம் மாதிரி பள்ளியில் தமிழ்நாடு அரசு தலைமை கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்களும், மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ் இ.ஆ.ப.,** அவர்களும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கி இன்று (22.02.2017) தொடங்கிவைத்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு தலைமை கொறடா அவர்கள் தெரிவித்தாவது:-**

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சி தலைவி அம்மா அவர்கள் கல்லாதவர்களே தமிழகத்தில் இருக்கக்கூடாது என்பதே குறிக்கோளாக கொண்டு பள்ளிக்கல்வித்துறைக்கு கடந்த 5 ஆண்டுகளில் ரூ.84 ஆயிரத்தி 568 கோடி ஒதுக்கியதில் பள்ளிக்கல்வித்துறை பெரும் வளர்ச்சி அடைந்துள்ளது.

பள்ளி மாணவ மாணவியர்களின் நலன் கருதி விலையில்லா என்னற்ற திட்டங்களை வாரி வழங்கி உள்ளார் இதில் குறிப்பாக விலையில்லா நோட்டு புத்தகங்கள் வழங்கும் திட்டம், விலையில்லா மடிக்கணிணிகள் வழங்கும் திட்டம், விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டம், விலையில்லா காலனிகள் வழங்கும் திட்டம், விலையில்லா வண்ண சீருடை வழங்கும் திட்டம், விலையில்லா கணித உபகரணங்கள் வழங்கும் திட்டம், விலையில்லா புத்தக பைகள் வழங்கும் திட்டம், விலையில்லா நிலவரைப்படம் வழங்கும் திட்டம், விலையில்லா கல்வி உபகரணங்கள் வழங்கும் திட்டம், பள்ளிகளில் கல்வி ஊக்கத்தொகை வழங்கும் திட்டம்,மற்றும் இலவசப்பேருந்து பயணச்சலுகை திட்டம், 10ம் வகுப்பு மற்றும் 12ம் வகுப்பு படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு பள்ளிகளிலேயே வேலைவாய்ப்பு பதிவு செய்தல், ஜாதி சான்றிதழ், இருப்பிட சான்றிதழ் வழங்குதல் போன்ற பொன்னான திட்டங்களை செயல்படுத்தினார்கள்.

இதில் குறிப்பாக, விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டத்திற்கு தமிழக அரசு கடந்த 5 ஆண்டுகளில் ரூ.1,009 கோடியே 93 இலட்சம் மதிப்பீட்டில் சுமார் 32 இலட்சம் மாணவ, மாணவிகள் பயனடைந்து உள்ளனர். இதில் அரியலூர் மாவட்டத்தில் 36,105 மாணவ, மாணவியர்கள் ரூ.90 கோடியே 03 இலட்சம் மதிப்பீட்டில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையால், மாணவ, மாணவியர்கள் அனைவரும் தமிழக அரசின் திட்டங்களை பயன்படுத்தி நன்றாக பயின்று இந்நாட்டிற்கும், வீட்டிற்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு தலைமை கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்தாவது:-

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு பல்வேறு வகையான நலத்திட்டங்களை வழங்கி வருகிறார்கள். 11-ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் இக்கல்வி ஆண்டில் அரியலூர் மாவட்டத்தில் மிதிவண்டிகள் வழங்கும் விழா முதல் நிகழ்வாக இன்று (22.02.2017) அரியலூர் மாவட்டம், அஸ்தினாபுரம் மாதிரி பள்ளியில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும், அரியலூர் மாவட்டத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் 55 மேல்நிலைப்பள்ளிகளில் 11-ஆம் வகுப்பில் 3244 ஆண்களும், 4129 பெண்களும் மொத்தம் 7373 மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர். இவர்களுக்கு 3244 ஆண்கள் மிதிவண்டிகளும், 4129 பெண்கள் மிதிவண்டிகளும் இவ்கல்வியாண்டில் வழங்கப்படவுள்ளன. இவற்றின் மொத்த மதிப்பு ரூ.2 கோடியே 99 இலட்சத்து 31 ஆயிரத்து 95 மதிப்பாகும். இதில் இப்பள்ளியில் பயிலும் 100 மாணவ, மாணவிகளுக்கு 55 ஆண்கள் மிதிவண்டிகளும், 45 பெண்கள் மிதிவண்டிகளும் வழங்கப்பட்டுள்ளன என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ் இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஜே.கே.என்.இராமஜெயலிங்கம், முதன்மை கல்வி அலுவலர் திரு.நா.மாரிமுத்து, மாவட்ட கல்வி அலுவலர், மாவட்ட தொடக்கல்வி அலுவலர் மற்றும் பள்ளி தலைமையாசிரியர், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.